**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – அரசு மற்றும் அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்வழி மற்றும் ஆங்கில வழியில் பயிலும் மாணவ/ மாணவியரிடமிருந்து 2008-09ம் கல்வி ஆண்டு முதல் சிறப்புக் கட்டணம் (Special fees) இரத்து செய்ததினால் பள்ளிகளுக்கு ஏற்படும் நிதி இழப்பினை ஈடுசெய்ய ஒப்புதல் அளித்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (இ1) துறை

அரசாணை (நிலை) எண். 218

நாள் : 08.11.2008
திருவள்ளுவர் ஆண்டு, 2039,
ஐப்பசி – 23

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.378, கல்வி, நாள் 11.03.1970.
2. அரசாணை (நிலை) எண்.1878, கல்வி, நாள் 29.09.1979.
3. அரசாணை (நிலை) எண்.977, கல்வி, நாள் 04.06.1980.
4. அரசாணை (நிலை) எண். 2717, கல்வி, நாள் 20.12.1980
5. அரசாணை (நிலை) எண்.708, கல்வி, நாள் 4.7.1985.
6. அரசாணை (நிலை) எண்.178, கல்வி, நாள் 18.2.1993.
7. அரசாணை (நிலை) எண்.1035, கல்வி, நாள் 10.11.1993.
8. அரசாணை (நிலை) எண்.394, பள்ளிக் கல்வி, நாள் 26.10.1998.
9. அரசாணை (நிலை) எண். 3, பள்ளிக் கல்வி, நாள் 7.1.1999.
10. அரசாணை (நிலை) எண். 110,பள்ளிக் கல்வி, நாள் 29.05.2008.
11. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 61155/ஜி.II/ இ3/07, நாள் 12.06.2008.

* * * * * * * * *

ஆணை:-

2008-09ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களிடமிருந்து ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் சிறப்புக் கட்டணம் (Special fees) 2008-2009 கல்வியாண்டிலிருந்து இரத்து செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் அனுப்பிய கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து மேலே வரிசை எண்.10ல் படிக்கப்பட்ட அரசாணை எண். 110, பள்ளிக் கல்வி, நாள் 29.5.2008ல் பின்வருமாறு ஆணைகள் வெளியிடப்பட்டன:-

(i) அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் "தமிழ் வழி" மற்றும் "ஆங்கில வழி" பிரிவுகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு

வரை பயிலும் மாணவ / மாணவியர்களிடமிருந்து ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் சிறப்புக் கட்டணம் (Special fees) 2008-09 கல்வி ஆண்டு முதல் இரத்து செய்யப்படுகிறது.

(ii) அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியரிடமிருந்து தற்போது வசூலிக்கப்படும் ஆங்கில வழி கற்பிப்பு கட்டணம் (English Medium Tuition Fees) தொடர்ந்து வசூல் செய்யப்படும்.

(iii) ஏற்கெனவே நடைமுறையில் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆகிய துறைகளின் மூலம் சிறப்புக் கட்டணம் ஈடுசெய்யப்படுவதற்கு பதிலாக பள்ளிக் கல்வித் துறைக்கான அரசு நிதி ஒதுக்கீட்டின் கீழ் போதிய நிதி வழங்கப்படும்.

3. மேலே பத்தி 2ல் குறிப்பிட்டுள்ள அரசாணையின் தொடர்ச்சியாக அரசு தற்போது பின்வருமாறு ஆணையிடுகிறது.-

(i) அரசு ஆணை (நிலை) எண்.110, பள்ளிக் கல்வித் துறை நாள் 29.5.2008ன் வாயிலாக சிறப்புக் கட்டணம் (Special fees) இரத்துச் செய்யப்பட்டதினால் ஏற்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.21.40 கோடி (ரூபாய் இருபத்தியொரு கோடியே நாற்பது இலட்சம்) நடப்பு நிதி ஆண்டிற்கு (2008-09) பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்ய ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(ii) இந்தத் தொடர் செலவினத்திற்கு அடுத்த நிதி ஆண்டு (2009-10) முதல் பள்ளிக் கல்வித் துறைக்கான வரவு செலவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதற்கான கருத்துருவை உரிய சமயத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(iii) ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆகிய துறைகளுக்கு மேற்கண்ட சிறப்புக் கட்டணம் ஈடு செய்யப்படுவதற்கென 2008-2009ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.12.69 கோடி தொகையினை திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தின்போது ஒப்படைக்க (Surrender) வேண்டும் என சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. மேலே பத்தி 3 (i) ல் குறிப்பிட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட புதிய கணக்கு தலைப்புகளில் பற்றுவைக்கப்படும்:-

<u>(i) ரூ. 14.26 கோடி</u>

2202 – பொதுக்கல்வி -02 இடைநிலைக்கல்வி -109-அரசு இடை நிலைப் பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது. BA. பள்ளிக்கல்வித்துறைகள் கீழ்வரும் அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் சிறப்பு கட்டணம் இரத்து செய்யப்பட்டதனால் ஏற்படும்

இழப்பீட்டுத் தொகையினை ஈடுசெய்தல் 51- இழப்பீடு -02 ஏனைய இழப்பீடு (த.தொ.கு 2202-02-109 –BA-5120)

(ii) ரூ.7.14 கோடி

2202 – பொதுக்கல்வி -02 இடைநிலைக்கல்வி-789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் - பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத்திட்டம் -JFபள்ளிக் கல்வித்துறையின் கீழ்வரும் அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் சிறப்புக் கட்டணம் இரத்து செய்யப்பட்டதினால் ஏற்படும் இழப்பீட்டுத் தொகையை ஈடுசெய்தல் 51- இழப்பீடு – 02 . ஏனைய இழப்பீடு. (த.தொ.கு 2202 – 02-789-JF-5122)

5. மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பிற்கு பள்ளிக் கல்வி இயக்குநர் மதிப்பீட்டு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

6. கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பினைத் துவங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இச்செலவினம் புதுப்பணித் திட்டமாக (New Service Scheme) கருதப்படும். இச்செலவினம் துணை மதிப்பீடுகள் 2008-2009ல் சேர்க்கப்பட்டு நாளடைவில் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 255/DS (RC) /08, நாள் 5.11.08-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1151 (ஆயிரத்து நூற்று ஐம்பத்து ஒன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,செ-5.
இயக்குநர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை-5.
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை-5.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-108.
ஆணையர், ஊரக வளர்ச்சி, சென்னை-15.
சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை-3.
மாநில கணக்காயர், சென்னை-18/ 35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/18/35/79.
சார் சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை-3
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக).
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.(பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக).

நகல்:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால்த் துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நிதித் (கல்வி-II) / (வரவு செலவு I & II) துறை, சென்னை-9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித் (வரவு-செலவு /எஸ்.) துறை, சென்னை-9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை 9.
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.